# சிறுபஞ்சமூலம் உணர்த்தும் இல்லற அறம்

**முனைவர் சூ. தங்க ப்ரீத்தா மலர்**
**malarkingslin86@gmail.com**

**முன்னுரை**

தமிழகத்தில் கடைச் சங்க காலத்தின் இறுதியிலிருந்து ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரை தமிழக வரலாற்றில் அமைதியில்லாத காலமாக இருந்தது. இக்காலக்கட்டத்தில் சோழ பாண்டிய நாடுகளைக் களப்பிரர்களும், தொண்டை நாட்டை பல்லவர்களும் அரசாண்டனர். களப்பிரர்கள் பாலி மொழியினையும், பல்லவர்கள் பிராகிருத மொழியினை ஆதரித்ததன் காரணமாகத் தமிழர்களின் வாழ்வியல் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க முறைமைகளின் மாற்றம் கண்டன. சீரழிவுகளும், அமைதி இன்மையும் ஆட்கொண்ட நிலையில் சமூகத்தில் ஏற்பட்ட அமைதி இன்மையினையும், குழப்பங்களையும், குற்றங்களையும் நீக்கி அறநெறியை மக்களுக்கு கற்பிக்கும் நோக்கில் பல புலவர் பெருமக்களால் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பே பதினெண்கீழ்க் கணக்கு நூற்கள்.

அறம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அறக்கருத்துக்களை நீதி நூல்களான வழங்கினர். சங்கம் மருவிய காலத்தில் படைக்கப்பட்ட நூல்களை,

“ நாலடி நான்மணி நானாற்பது தைந்திணை முப்
பால்கடுக ங் கோவை பழமொழி - மாமூலம்
இ ன்னிலை சொற் காஞ்சி யுட னேலாதி யென்பவே
கைந்நிலை யோ டாங்கீழ்க் கணக்கு”

என்று பழம் பாடல் குறிப்பிடுகின்றது. அந்த வரிசையில் சிறுபஞ்சம்மூலம் குறிப்படும் இல்லறம் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

**இல்லற வாழ்வு**

இல்லற வாழ்வு என்பது இறைவன் கொடுப்பது. மனித வாழ்க்கையில் பருவங்கள் பல, ஆயினும் வாழ்வின் பெரும் பகுதி, இல்லற வாழ்க்கைக்கே சென்றுவிடுகின்றது. அந்த இல்லற வாழ்வானது இன்பமாக அமையவில்லையெனில் மனிதனுடைய வாழ்க்கை முழுவதும் நரகமாகிவிடும். இல் + அறம் - உள்ளே உள்ள அறம் விருந்தோம்பல், உறவினரைப் போற்றுதல், வறியவரைப் போற்றுதல், நல்ல குடிமக்களை உருவாக்கி சமூகத்திற்கு கொடுத்தல் என பல அறங்கள் சிறக்க அடிப்படையாக அமைவது. இல்லறம். இல்லாள் இன்றி இல்லறம் இல்லை. இதனையே ஔவையார்,

“ இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்-இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும் ” (மூதுரை : 21)

நல்ல குணமுடைய மனைவி இருந்தால் மட்டுமே குடும்பத்தில் எல்லா வளமும் அமையபெறும். ஆனால் அவள் நற்பண்புகள் அமையப் பெறாதவளாகவும், கணவனை எதிர்த்து கடுமையான சொற்களைப்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பேசுபவளாகவும் அமைந்துவிட்டால் அந்த இல்லமானது புலி தங்கிய புதர் போல் பாழாய்ப் போகும் என்கிறார். இதனையே

"இல்லற மல்லது நல்லற மன்று" (கொன்றை வேந்தன் : 3)

என்னும் பாடலின் வழி இல்லற வாழ்வே சிறந்த அறமாகும். இல்லறம் இல்லாது செய்யப்படும் எல்லாம் அறம் அல்ல என்று குறிப்பிடுகின்றார்.

**திருமணம்**

திருமணம் என்பது இரு மனங்கள் சங்கமிக்கும் நிகழ்வு மட்டுமல்ல. இரு வேறு குடும்பங்கள் இணையும் நிகழ்வு. புத்தம் புதிய வாழ்வின் தொடக்கம் என்றே குறிப்பிடலாம். வேறு வேறுபட்ட சூழலில் பிறந்து வளர்ந்த இருவர் ஒற்றுமையாக ஒரே கருத்துடன் ஈருடல் ஓருயிராய் சேர்ந்து வாழச் செய்யும் அற்புதப் பிணைப்பு. அத்தகைய திருமணம் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் போல் அல்லாமல் நல்ல நாள் பார்த்து செய்ய வேண்டும் என்பதை,

" நான் கூட்டம் மூர்த்தம் அவற்றோடு நன்றாம் அக்
கோன் கூட்டம் யோகம் குணனுணர்ந்து - தோள்கூட்டல்
உற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வானால்
பெற்றால் நாள்கொள்க பெரிது. " (சிறுபஞ்சமூலம். 44)

நாள் பொருத்தம் , நாழிகை (நேரம், காலம்) கோள்களின் பொருத்தம், யோகம் போன்றவற்றை ஆராய்ந்து திருமணம் முதலிய எல்லாவிதமான நற்செயல்களைச் செய்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

**கற்பு**

பெண்களுக்குக் கற்பு இன்றியமையாதது. அது பெண்ணுக்கு அழகுக்கு அழகு சேர்க்கும். பெண்கள் தங்களின் கற்பு நெறியில் இருந்து தவறும் நேரத்தில் அது அவளுக்கு மட்டுமல்ல அவளது குடும்பத்திற்கே மிக பெரிய விளைவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை எனலாம். கற்புடைய பெண்ணை இந்த உலகம் போற்றி வணங்கும். இலக்கியத்தில் கற்புக்கு இலக்கணமான பெண்களாக சீதை, தமயந்தி, அனுசுயை, வாசுகி முதலானவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களை இன்றளவும் உலகம் கொண்டாடுகின்றது. அத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்ணின் கற்பினை காப்பவர்களாக கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை என ஐவரை மட்டுமே குறிப்பிடுகின்றது. இதனையே,

" கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்
வண்டார்பூந் தொங்கல் மகன்தந்தை - வண்தாராய் !
யாப்பார்பூங் கோதை அணிஇழையை நன்கியையக்
காப்பார் கருது மிடத்து. " (சிறுபஞ்சமூலம். 54)

என்னும் பாடலின் வழி அறிந்துக் கொள்ளமுடிகின்றது.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**நற்பண்பு**

பெண்களை அன்பின் வடிவம் என்றே கூறலாம். இனிய சொல்லும் பிறரை மதிக்கும் பண்பும் இயல்பிலேயே கிடைக்கப் பெற்றவர்கள் பெண்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணத்தால் சிறந்து விளங்குபவர்கள். அவர்கள் எதிர்த்துப் பேசும் குணம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். தன்னுடைய கணவனின் குணநலன்களை அறிந்து அவனை அன்புடன் போற்றும் தன்மையுடையவளாக இருக்க வேண்டும் நல்ல குலப் பெண்ணால் குடும்பம் தழைத்தோங்கும் கணவனின் இன்பதுன்பத்திலும், வாழ்வின் நன்மைகள் நடைபெற காரணமாய் இருப்பவளே நல்ல குலமகள் என்பதினை வெற்றி வேற்கை,

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்" (11)

"குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்" (12)

"கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர்" (22)

என்று குறிப்பிடுகின்றது. மேலும் அழகு, இனிய மொழி பேசுதல், திருமகள் போன்ற அழகு, கீழ்மை குணமும் இன்மை. விருந்தினர்களைப் போற்றுதல், கணவன் சொல்லை மதித்தல், மழலைச் செல்வம் பெறுதல், கணவனது கருத்து ஏற்று வாழ்தல், அவன் உண்ணும் உணவின் மிகுதியை உண்ண விரும்புதல், முதலிய பண்புகளைப் பெற்று கணவன் அளவில் அடங்கியிருத்தலே நலம் என்கிறார் காடுயாசனார். இதனையே

" பேண்அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை
நாண்ஒடுக்கம் என்றைந்தும் நண்ணின்றாப் - பூண்ஒடுக்கம்
பொன்வரைக்கோங் கேர்முலைப் பூந்திருவே யாயினும்
தன்வரைத் தாழ்த்தல் அரிது " ( 45)

"மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை
ஒக்க உடனுறைதல் ஊண்அமைவு - தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்(கு) ஐந்து
தலைமகனைத் தாழ்க்கு மருந்து " (53)

என்னும் சிறுபஞ்சமூலம் பாடல்களின் வழி அறியலாம்.

**மக்கட்பேறு**

பேறுகளில் எல்லாம் சிறந்த பேறு மக்கட் பேறு. மக்கட் பேற்றின் சிறப்பைப் போற்றி வள்ளுவர் மக்கட்பேறு எனும் தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். பெண்ணின் பெருமையையும் மக்கட் பேறின் சிறப்பையும்,

"கற்புடுத்து அன்பு முடித்து நாண் மெய்ப்பூசி



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

நற்குண நற்செய்கை பூண்டா ங்கு - மக்கட்பேறு

என்பதோ ராக்கமும் உண்டாயின் இல்லன்றே

கொண்டா ர்க்குச் செய்தவம் வேறு" (நீதிநெறி : 80)

என்னும் பாடலில் நல்ல குணம், நல்ல நடத்தைகள், நற்செய்கை கொண்ட மனைவிக்கு மக்களைப் பெறுவதாகிய குழந்தைச் செல்வமும் இருந்தால் அவளை மனைவியாகக் கொண்டவள் தவம் செய்ய வேண்டுவது இல்லை என்று குறிப்பிடுகின்றார்.

மக்களை பெறுதலோடு மட்டும் பெண்ணின் பொறுப்புகள் நின்று விடுவதில்லை. தன் கருவினை அறியாமல் பாதுகாத்தல், குழந்தையைப் பாதுகாத்தல், வளர்ப்பார் இல்லாத குழந்தைகளை எடுத்து வளர்த்தல், அதற்கு நோய் வந்தால் மருந்து கொடுத்தல், குழந்தைகளை அச்சுறுத்தாமல் முதலியவற்றையும் பெண்களின் கடமைகளாக காரியாசனார் கூறுகின்றார்.

" ஈன்றெடுத்தல் சூல்புறஞ் செய்தல் குழவியை

ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை - ஆன்ற

அழிந்தானை இல்வைத்தல் பேரறமா ஆற்ற

மொழிந்தார் முதுநூலார் முன்பு " (சிறுபஞ்சமூலம். 72)

"கலங்காமைக் காத்தல் கருப்பஞ் சிதைந்தால்

இலங்காமை பேரறத்தால் ஈற்றம் - விலங்காமைக்

கோடல் குழவி மருந்து வெருட்டாமை

நாடின் அறம்பெருமை நாட்டு " (சிறுபஞ்சமூலம்.74)

என்னும் பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**சிக்கனம்**

மக்கள் செலவு செய்வதில் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும். வெளியில் சென்ற பொருளீட்டும் கணவனின் வருமான்ம அறிந்து அதற்கு தகுந்தாற் போல் செலவு செய்து, அந்த குறைந்த வருமானத்திலும் சேமிக்கும் பழக்கம் பெண்களுக்கு வேண்டும் வரவுக்கு மேல் செலவு செய்வதும் வாழ்க்கையில் சிக்கனமின்றி இருப்பதும் வாழ்வில் துன்பமே விளைவிக்கும். இதனை ஔவையார்,

"அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு" (கொ.வேந். 13)

குறிப்பிடுகின்றார். மேலும் அவர்,

" ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்

மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை

எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புத் தீயனாய்

நல்லார்க்கும் பொல்லனாம் நாடு " (நல்வழி 25)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

எனும் பாடலில் செலவுகளை அதிகமாக செய்வதால் துன்பம் வரும் என குறிப்படுகின்றார். தனது கணவரின் வருவாயின் அளவை அறிந்து அதற்குத்தக்கவாறு செலவு செய்தல் சுற்றத்தினர் பயந்து ஒதுங்காமல் தம்மை விரும்பும்படி தழுவிக் கொள்ளுதல், விருந்தோம்பல், தெய்வவழிபாடு செய்தல். இவை ஐந்தும் தொழில்களும் பெண்களுக்கு சிறப்பினைத் தருவனாகும். இதனை,

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெகுவாமை வீழ்ந்துவிருந் தோம்பித் - திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு " (சிறு : 25)

என்னும் பாடலின் வழி அறிந்துக் கொள்ள முடிகின்றது.

**முதியோரை பேணுதல்**

பத்துமாதம் குழந்தையை வயிற்றில் சுமந்து அதனை சீராட்டி நோய்நொடி அண்டாது பத்தியம் இருந்து வளர்க்கின்றார் தாய். மீதம் உள்ள காலம் முழுவதும் தன் குழந்தையின் எதிர்காலத்திற்காக தன் நிகழ்காலம் முழுவதையும் தியாகம் செய்கின்றான் தந்தை. குழந்தைகளை வளர்த்து, கல்வி சொத்து சுகம் என அனைத்தும் கொடுத்து உயர்ந்த நிலையில் வைக்க தன்னலமில்லாது பாடுபடுகின்றனர். அந்த குழந்தைகள் நற்குணங்களும் நல்லறிவும் பெற்று சமூகச் சிந்தனை உள்ளவர்களாக மாறவேண்டும். வாழ்வில் எத்தகைய உயர்நிலைய அடைந்தாலும் தாய் தந்தையரை காப்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இதனை ஔவையார் ஆத்திச்சூடியில்,

"தந்தை தாய் பேண்" (ஆத்தி.20)

என குறிப்பிடுகின்றார்.

" நாணிலன் நாய்நன்கு நள்ளாதான் நாய்பெரியார்ப்
பேணிலன் நாய்பிறர் சேவகன்நாய் - ஏணில்
பொருந்திய பூண்முலையார் சேரிகைத்(து) இல்லான்
பருத்தி பகர்வழி நாய் " (சிறு : 88)

பெற்றோரை பேணாதவன் நாய்க்கு சமமாக குறிப்பிடுகின்றார்.

**இல்லறமே நல்லறம்**

இல்லறத்திற்குப் பின்பே துறவு என்பது தமிழர்களின் வாழ்வியல் கோட்பாடு. இல்லற வாழ்வை முற்ற அனுபவித்த பின்புதான் தவம் வசப்படும். இல்லற வாழ்வை அனுபவிக்காமல் மேற்கொள்ளும் துறவு சிறப்புத்தராது. சீவக சிந்தாமணியில் சீவகன் எட்டுப் பெண்களை மணந்து இல்லறம் நிறைந்து பின்பு வீடுபேறு பெற்றான் என்பதை நாம் அறிந்திருக்கின்றம். ஆக துறவம் சிறக்க

வேண்டுமாயின் இல்லறம் சிறக்க வேண்டும். சிறந்த இல்லறம் துறவறத்திற்கு சமமாகும். இதனை படிக்காசுப்புலவர்,

“ புல்லறிவுக் கெட்டாத தண்டலையார்
வளந்தழைத்த பொன்னி நாட்டில்
சொல்லறமா தவம்புரியும் சௌபுரியும்
துறவறத்தைத் துறந்து மீண்டான்
நல்லறமாம் வள்ளுவர்போற் குடிவாழ்க்கை
மனைவியுடன் நடத்தி நின்றான்
இல்லறமே பெரிதாகும் துறவறமும்
பழிப்பின்றேல் எழில தாமே” (தண்டலையார் சதகம் -5)

என்று குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

ஆணும், பெண்ணும் உற்றாரும், பெற்றோரும் அறியத் திருமணம் செய்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவதே இல்லறம். இத்தகைய இல்லறம் இனிமையாக அமைய இருவரின் பங்கும் சமமாக இருக்கிறது. மனிதர்கள் நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து நாகரீக வளர்ச்சிக்கு மாற அடிப்படைக்காரணமே குடும்ப முறை எனலாம். தொடக்க காலத்தில் குடும்பம் என்ற சொல் பெரும்பாலான இடங்களில் கூட்டுக்குடும்ப முறையே சுட்டுகிறது. காலம் மாற மாற நம்முடைய வாழ்க்கை முறைகளிலிருந்து நாம் மாறிவிட்டோம். இன்னும் பழமையை பேசும் பழங்குடியினர் அத்தகைய வாழ்க்கையை இன்றளவும், வாழ்ந்துக் காட்டுகின்றனர்.

இனி வரும் நம்முடைய சமுதாயம், சீரான வாழ்க்கை வாழ வேண்டுமாயின் நல்லறங்களை போதிக்கும் நீதி நூற்கள் குறிப்பிடும் வாழ்வியல் நெறிகளை கடைப்பிடிக்கும் போது, இன்றைய சமுதாயம் சமூகத்தில் காணப்படும் பலவிதமான சிக்கல்கள் பேரழிவுகளிலிருந்து மீளமுடியும் அறங்கள் எல்லாம் பிறக்கும் இடமாக இல்லறத்தை மறுபடியும் மாற்ற முடியும் என்பதே உண்மை.

**பயன்பட்ட நூல்கள்**

1. இராசாராம் துரை - **பதினெண் கீழ்க்கணக்கு,**
முல்லை நிலையம்,
9, பாரதிநகர், முதல் தெரு,
தி.நகர், சென்னை - 600 017
முதற்பதிப்பு- நவம்பர் 1996.

2. கதிர்முருகு, (உ.ஆ.) - **இலக்கிய வரலாற்று வரிசை பிற்கால நீதி இலக்கிய வரலாறு,**
நாம் தமிழர் பதிப்பகம்,
10/14, தோப்பு வெங்கடாசலம் தெரு,

திருவல்லிக்கேணி,
சென்னை - 5

முதற் பதிப்பு - டிசம்பர் 2010.

3. கதிர்முருகு, (உ.ஆ.) - **நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்,**
சாரதா பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு - மார்ச் 2007.

4. கதிர்முருகு, (உ.ஆ.) - **தண்டலையார் சதகம்,**
சாரதா பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு - அக்டோர் 2009.

5. கீர்த்தி - **நீதி நூல்கள்,**
அருணா பப்ளிகேஷன்ஸ்,
12 முதல் தெரு, வடக்கு ஜெகநாத நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை -600 049

முதற்பதிப்பு - நவம்பர் 2011.